
St. Vincent Ferrer

ஏப்ரல் 5

## *புனித வின்செண்ட் பெரெர் (1350-1419)*

இவர் புனித சுவாமிநாதரின் சபையில் சேர்ந்து முதல் வார்த்தைப்பாடு கொடுத்ததும் கல்வி கற்பிக்க நியமிக்கப்பட்டார். குருத்துவ கல்வியைப் பயிலும் பொழுதே மக்களுக்கு மறையுரைகள் நிகழ்த்துவார். பாப்பானவர் இவரை அழைத்து தம்முடன் வைத்துக் கொண்டு இவருக்கு உயர்ந்த வேலை ஒன்றைக்கொடுத்தார். அக்காலத்தில் திருச்சபையில் ஏற்பட்ட பிரிவினையைத் தடுக்க முடியவில்லை. இவரைக் கர்தினால் பதவிக்கு உயர்த்த பாப்பானவர் விரும்பினார். இவர் இணங்காமல் வேதபோதக அலுவலுக்காக தம்மை அனுப்பும்படி மன்றாடி அமைதிபெற்றார். ஐரோப்பாவில் எட்டு நாடுகளில் ஊர் ஊராகச் சென்று போதித்தார். பொதுத் தீர்வையைப் பற்றி அடிக்கடி பேசுவார். ஏராளமான பாவிகள் மனந்திரும்பினர். மகமதியர் வசித்த கானடா நாட்டிலும் நற்செய்தியை போதித்து அநேகரை மனத்திருப்பினார். இவர் கடும் தவ முயற்சியை போதித்து அநேகரை மனத்திருப்பினார். இவர் கடும் தவ முயற்சிகளைச் செய்து, தரையில் படுத்துறங்குவார். காலையில் இரண்டு மணிக்கு எழும்புவார். ஒவ்வொரு நாளும் மூன்று அல்லது நான்கு மறையுரைகள் நிகழ்த்துவார். சில சமயங்களில் மூன்று மணி நேரம் தொடர்ந்து பேசுவார். காலையில் நிகழ்த்த வேண்டிய உரைகளுக்கு முந்தின நாள் மாலையிலே தயாரிப்பார். பிரிட்டன் நாட்டில் வேதம் போதிக்கம் போது இவர் இறந்தார்.

**சிந்தனை:**

தரித்திர வார்ததைப்பாட்டை உச்சரிப்பதற்காக அநேக துறவிகள் பெருமைப்படுகிறார்கள். அதனால் ஏற்படும் வேதனைகளையும், தாழ்மைகளையும் அவர்கள் வெறுக்கிறார்கள். (புனித வின்செண்ட் பெரெர்)

**செபம்:**

ஆண்டவரே, வேத போதகர்கள் செபத்தையும் தவத்தையும் மதித்து நேசிக்கச் செய்யும்.